# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1574/25 - 2008 නොවැම්බර් 07 වැනි සිකුරාදා - 2008.11.07

1574/25 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 1/69.

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் அத்துடன் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ ,
சனாதிபதி.

கொழும்பு ,
2008, நவெம்பர் 07.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம் எ எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளெவரும் -

(அ) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களை; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்கள் அடங்கிய எவையேனும் பொருட்களை அல்லது பண்டங்களை,

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டதிகாரியால் அதன்பொருட்டு வழங்கப்பட்ட உரிமம் ஒன்றிற்கு இணங்க தவிர, வேறு வகையில் சொல்லப்பட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய திகதியிலிருந்து இலங்கைக்குள் இறக்குமதி செய்தலோ அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தலோ ஆகாது.

3. உரிமத்துக்கு விண்ணப்பிக்கும் ஆள் அத்தகைய இறக்குமதி அல்லது ஏற்றுமதி "அத்தியாவசியப் பாவனைகளுக்கு" அல்லது "நெருக்கடி நிலையிலான பாவனைகளுக்கு" என முன்னப்பட்டது என்பதனைக் காண்பிப்பதற்கான எண்பிப்பை முன்வைக்கக்கூடியவராக இருந்தாலன்றி இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு விடயத்திற்கேற்ப பதார்த்தங்கள் அல்லது பதார்த்தங்கள் அடங்கிய பொருட்கள் அல்லது பண்டங்கள் தொடர்பில் இறக்குமதிக்கான அல்லது ஏற்றுமதிக்கான உரிமம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

4. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்கு -

"நெருக்கடி நிலைமையிலான பாவனைகள்" என்பது எந்தப் பாவனைக்கென திட்டவட்டமாகக் குறித்துரைக்கப்பட்டதும் குறிப்பிட்ட எந்தப் பதார்த்தம் கிடைக்காதுபோனால் அதன் விளைவாக முக்கியமான சந்தை சீர்குலைவு ஏற்படுவதுடன் சூழலினதும் சுகாதாரத்தினதும் கோணத்திலிருந்து பாவனையாளருக்குக் கிடைக்கக்கூடிய அத்தகைய பொருளுக்கு தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சாத்தியமுள்ள மாற்றுப் பதார்த்தங்கள் இல்லாதிருப்பதன் காரணமாக நெருக்கடி நிலைமை ஏற்படுமோ அந்தப் பாவனை எனப் பொருள்படும் ;

"அத்தியாவசியப்பாவனை" என்பது சுகாதாரத்துக்கு அல்லது பாதுகாப்பிற்கு அத்தியாவசியமானதும் அல்லது கலாசார மற்றும் புலமைத்துவத் தேவைப்பாடுகள் உட்பட சமுதாயத்தின் செயற்பாட்டிற்கு இன்றியமையாததுமான பாவனை எவையும் சூழலினதும் சுகாதாரத்தினதும் கோணத்திலிருந்து, பாவனையாளருக்குக் கிடைக்கக்கூடிய அத்தகைய பொருளுக்குத் தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சாத்தியமுள்ள மாற்றுப் பதார்த்தங்கள் இல்லாத நிலையிலான பாவனை எனவும் பொருள்படும்.

**அட்டவணை**

*பதார்த்தங்கள்*

*1. வேர்ஜின் சொலோடிலுலோகபோன்ஸ்- (2009.01.01 ஆந் திகதியிலிருந்து பயனுறும்)*

*2. வேர்ஜின் பிறோமோபுலுரோகாபன்கள் - (2010.01.01 ஆந் திகதியிலிருந்து பயனுறும்)*

*11- 452*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.